# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## ECS 3.12 – SRI LANKAN ECONOMY

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. இலங்கைப் பொருளாதார கட்டமைப்பின் பிரதான சிறப்பியல்புகளைத் தேசிய வருமானத் தரவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

02. அ) இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை, ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கை என்னும் பதங்களை வேறுபடுத்துக

(04 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் மேற்படி இரு கொள்கைகளினதும் அமுலாக்கம் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய வெற்றி தோல்விகளை மதிப்பிடுக.

(16 புள்ளிகள்)

03. அபிவிருத்தி அடைந்து வரும் நாடொன்றின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசாங்கத் தலையீடு ஏன் அவசியம் என்பதனை இலங்கையின் கடந்த கால அனுபவங்களை மையமாக வைத்து மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

04. யுத்தத்தின் பின்னர் இலங்கையின் பிரயாணக் கைத்தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், அதனை விருத்தி செய்வதற்கு அரசு தற்போது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

05. "இலங்கையில் 1977ன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கை சென்மதி நிலுவையை மோசமடையச் செய்துள்ளது" விளக்கி, கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

06. அ) இலங்கையின் கடந்த மூன்று தசாப்த கால அனுபவத்தை அடிப்படையாக வைத்து பொருளாதார அபிவிருத்திக்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டின் பங்கினை ஆராய்க.

(15 புள்ளிகள்)

ஆ) நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்கு எதிராக உம்மால் கூறக்கூடிய வாதங்களை இனங்காண்க.

(05 புள்ளிகள்)

07. இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் யுத்தத்திற்கு முன்னரும், யுத்தத்திற்குப் பின்னரும் பாதுகாப்புச் செலவினத்தில் நீர் காணும் முக்கிய மாற்றங்களை இனங்கண்டு அதற்கான காரணங்களையும் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

அ) உலகமயமாக்கலின் தாக்கங்கள்

ஆ) இலங்கையின் வயதுக் கட்டமைப்பில் முதியோரின் பங்கு

இ) இலங்கையின் சிறு நில விவசாயத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள்

ஈ) இலங்கையின் வேலையின்மையில் காணப்படும் முக்கிய பண்புகள்

(20 புள்ளிகள்)

*****